செ.வெ.எண்:62 நாள்: 21.06.2021

**ஈரோடு மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவலை தடுக்கவும், கண்காணிக்கவும் அனைத்து வட்டாரங்களிலும் துணை ஆட்சியர் நிலை அதிகாரி தலைமையில் வட்டார மருத்துவ அலுவலர், காவல் ஆய்வாளர், வருவாய் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் செயல் அலுவலர்களை உள்ளடக்கிய செயலாக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.**

**ஈரோடு மாவட்டத்தில் கொரோனா பரிசோதனை மற்றும் சிகிச்சையினை அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். அங்கரிக்கப்படாத மருத்துவமனைகள் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட மருத்துவமனை மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**அனைத்து தனியார் மருத்துவமனைகள், CT Scan Centres மற்றும் Private Laboratories ஆகியோர் காய்ச்சல் மற்றும் இதர கொரோனா தொற்று அறிகுறிகளுடன் பரிசோதனைக்காக வரும் நபர்களின் முழு விபரத்தினையும் சேகரித்து தினசரி மாவட்ட நிர்வாகத்திற்கு அறிக்கையாக அளிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஹச்.கிருஷ்ணனுண்ணி இஆப., அவர்கள் தகவல்.**

**-----------**

ஈரோடு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று இரண்டாம் அலை பரவலை தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஹச்.கிருஷ்ணனுண்ணி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

ஈரோடு மாவட்டத்தில் கொரோனா பரிசோதனை மற்றும் சிகிச்சையினை அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மட்டுமே கொரோனா பரிசோதனை மற்றும் சிகிச்சையளிக்க வேண்டும். அங்கீகரிக்கப்படாத தனியார் மருத்துவமனைகள் பரிசோதனை மேற்கொள்ளவும், சிகிச்சையளிக்கவும் அனுமதி இல்லை. அங்கரிக்கப்படாத மருத்துவமனைகள் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட மருத்துவமனை மீது பேரிடர் மேலாண்மை சட்டம் 2005-ன் படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் மருத்துவமனைகள் (Clinic), CT Scan Centres மற்றும் Private Laboratories ஆகியோர் காய்ச்சல் மற்றும் இதர கொரோனா தொற்று அறிகுறிகளுடன் பரிசோதனைக்காக வரும் நபர்கள் மற்றும் நோயாளிகளின் முழு விபரத்தினையும் சேகரித்து தினசரி மாவட்ட நிர்வாகத்திற்கு அறிக்கையாக அளிக்க வேண்டும். இதனை பின்பற்றாத நிறுவனங்கள்மீது பேரிடர் மேலாண்மை சட்டம் 2005-ன் படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் தனியார் மருத்துவமனைகள், CT Scan Centres, மற்றும் தனியார் ஆய்வகங்கள் ஆகியவற்றை கண்காணிக்க 2 மண்டல அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர் (சுகாதாரம்), ஈரோடு ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று பரவலை தடுக்க மற்றும் கண்காணிக்க அனைத்து வட்டாரங்களிலும் துணை ஆட்சியர் நிலை அதிகாரி தலைமையில் வட்டார மருத்துவ அலுவலர், காவல் ஆய்வாளர், வருவாய் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் செயல் அலுவலர்களை உள்ளடக்கிய செயலாக்க குழு அமைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

செயலாக்க குழுக்களை மேற்பார்வை செய்ய கீழ்க்காணும் அலுவலர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

| வ. எ | வட்டாரம் | அலுவலர் பதவி |
|---|---|---|
| 1. | ஈரோடு, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி | கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) /திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு |
| 2. | பெருந்துறை, சென்னிமலை மற்றும் பவானி | உதவி ஆட்சியர் (பயிற்சி), ஈரோடு. |
| 3. | சத்தியமங்கலம், நம்பியூர், பவானிசாகர் மற்றும் தாளவாடி | மாவட்ட வருவாய் அலுவலர், ஈரோடு. |
| 4. | அம்மாபேட்டை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம் மற்றும் தூ.நா.பாளையம் | திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஈரோடு. |

மேலும், ஈரோடு மாவட்டத்தில் 24 மணி நேர War Room (ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம் - Unified Commanding Centre) இயங்கி வருகிறது. எனவே பொதுமக்கள் கொரோனா நோய்த்தொற்று தொடர்பாக மருத்துவ ஆலோசனை, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள படுக்கை வசதிகள் குறித்த விவரங்கள், மெடிக்கல் ஆக்ஸிஜன் தேவைகள் குறித்த விவரங்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் தொடர்பான சந்தேகங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை கேட்டுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஹச்.கிருஷ்ணனுண்ணி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 8056931110 | 6. | 8754731110 |
| 2. | 8220671110 | 7. | 8870361110 |
| 3. | 8220791110 | 8. | 8870541110 |
| 4. | 8754231110 | 9. | 8870581110 |
| 5. | 8754381110 | 10. | 8870691110 |

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு.